
ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 1 ■ திசம்பர், 2018

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்




JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் ஆ. மார்பி கமலா பாய்
முனைவர் சு. குமரன்
முனைவர் க. லதா
திருமதி க. ரேவதி
முனைவர் ஆ. தேவ் மாலா













தொகுதி - 2

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
தமிழ் உயராய்வு மையம், மதுரை-18

மலாயாப் பல்கலைக்கழகம்
இந்திய ஆய்வியல் துறை

சான்லாக்ஸ் பன்னாட்டுத்
தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்
பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்

UGC Approved Journal Number: 40/99 | VOLUME 3 | SPECIAL ISSUE 1 | DECEMBER 2018

Shanlax International Journal of Tamil Studies

A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 1 | கோபல்லபுரத்து மக்கள் நாவலில் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியல் கூறுகள்<br>**முனைவர் அ. அமுதா** | 1 |
| 2 | இசுலாமியப் புதினங்கள்: ஆளுமைகளும் ஆக்கங்களும்<br>**முனைவர் அ. மு. அயூப்கான்** | 5 |
| 3 | சோ. தர்மனின் 'சூல்' நாவலில் 'நீர்ப்பாய்ச்சி' பாத்திரம்<br>**முனைவர் பா. அரிபாபு** | 8 |
| 4 | "கூளமாதாரி" புதினத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் நிலை<br>**முனைவர் ச. அருள்செல்வி** | 11 |
| 5 | வேளாண் புதினங்களின் செல்நெறி<br>**ஜா. அலெக்ஸ் அருள் தாசன்** | 14 |
| 6 | சு. வேணுகோபாலின் வெண்ணிலை - நோக்கும் போக்கும்<br>**சா. அனுபமா** | 17 |
| 7 | ரமணிசந்திரன் நாவலில் நோக்கும் போக்கும்<br>**த. ஆதிலெட்சுமி** | 20 |
| 8 | ஓடி விளையாடு பாப்பா<br>**டெ. ஆனி மரிய ஜான்சி** | 23 |
| 9 | தொல்காலத்திலிருந்து நவீனகாலம் வரை 'பாஞ்சாலி' பாத்திரம்<br>**மா. சே. இராதா** | 26 |
| 10 | சோ.தர்மனின் 'சூல்' நாவலில் நாட்டுப்புறத் தெய்வங்கள்<br>**பா. இராஜலெட்சுமி** | 29 |
| 11 | புதுமைப்பித்தன் சிறுகதைகளில் மானுடப் புனைவு<br>**சோ. இலக்கியா** | 32 |
| 12 | பொன்விலங்கு நாவல் காட்டும் சமூக அவலங்கள்<br>**ர. ஜாஸ்மின்பா** | 35 |
| 13 | சிறுகதைக் கூறுகளில் - கொலைகள்<br>**மு. கண்மணி** | 38 |
| 14 | ஆணவக்கொலைகளுக்கு எதிராக பெத்தவன் சிறுகதை<br>**நா. கணேசன்** | 42 |
| 15 | வைராட்சி<br>**சா. கருணாகரன்** | 45 |
| 16 | ஜெயகாந்தனின் சிறுகதைகளில் சமுதாயப்பார்வை<br>**த. கலைமதி** | 49 |

# ஓடி விளையாடு பாப்பா

**டே. ஆனி மரிய ஜான்சி**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை

குறு குறு பார்வை, தேன் சிந்தும் அதரம், வெள்ளைச் சிரிப்பு, சின்ன நடை, மழலை மொழி... நமது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளைப் பற்றிய எண்ணம் மகிழ்ச்சி அளிப்பதாகவே இருக்கிறது. குழந்தைகளைப் பற்றிய நினைவுகள் மட்டுமல்ல; குழந்தைப் பருவத்தின் நினைவுகளும் அழகானவை. நாம் சற்று பின்னோக்கி நம் குழந்தைப் பருவ நினைவுகளில் வலம் வந்தோமானால், மனதிற்குள் பட்டாம்பூச்சி படபடக்கும். அடுத்த கணம் நீண்டதொரு பெருமூச்சு வெளிப்படும். 'அப்பொழுதெல்லாம் எந்தவிதக் கவலைகளுமின்றி சுற்றித் திரிந்தோம்' என்ற ஏக்கக் குரல் தென்படும். ஆம், கவலைகள் அற்ற கனாக்காலம் தான் நமது குழந்தைப் பருவம். ஆனால் இத்தகைய கனாக்காலம் அனைவருக்கும் சாத்தியமா?

அறிவியல் வளர்ச்சி உச்சத்தை எட்ட முனையும் இன்றைய இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நகர்ப்புறங்களில் பெரும்பாலான மனிதர்களின் வேலையை இயந்திரமே பார்த்து விடுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுவது ஒருபுறமிருக்க, கிராமப்புறங்களிலோ வறுமையின் கொடுமையால் குழந்தைகளும் வேலைக்குச் செல்லும் அவலநிலை காணப்படுகின்றது.

**“தேனீக்கூட்டம் போல தெருவெல்லாம்**
**விளையாடும் குழந்தைகள்**
**இன்று**
**மாறுவேடம் கொண்டு**
**மாய்ந்து கொண்டிருக்கின்றனர்**
**நிலவினை ரசித்து பால் பருக வேண்டிய**
**மழலைகள் இன்று**
**நிலம்தனில் வாழ நிலையற்று நிற்கின்றனர்”**

என்ற சுகுமாறனின் கவிதை வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் குழந்தைகளின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. குழந்தைத் தொழிலாளர்களாகச் சிறுவர்கள், சிறுமிகள் என்ற பாகுபாடின்றி அனைவரும் வதைக்கப்பட்டாலும் மேலாண்மை பொன்னுச்சாமியின் 'இழந்த உலகம்' கதையில் வரும் குழந்தைகள் அனைவரும் சிறுமிகளாகவே காணப்படுகின்றனர். ஒரு காலகட்டம் வரை கல்வி என்பது ஆண் பிள்ளைகளுக்கு மட்டுமே தரப்பட்டு, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' எனக் கூறி, பெண் குழந்தைகளுக்கு வேலைப்பளு மட்டுமே கொடுக்கப்பட்டது.

**மயில்தாய்**

'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று; குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று' என்பர். ஆனால் குழந்தையைச் சமாளிப்பது என்பது எளிதான காரியமல்ல என்பதை அனைவரும் அறிவர். காரணம், குழந்தையின் மனநிலை நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டே இருக்கும். ஒன்றிலிருந்து அடுத்ததற்குத் தாவிக் கொண்டே இருக்கும். அதிலும் ஆசிரியர் மேலாண்மை பொன்னுச்சாமியின் மயில்த்தாய் கொஞ்சம் அதீத துறுதுறுப்பு; தீப்பெட்டி ஆபீஸில் வேலை பார்ப்பவள். ஆசிரியர் மயில்த்தாயை அறிமுகப்படுத்தும் பொழுதே 'கணக்குப்பிள்ளை தருவதற்குள், அவரிடமிருந்து பதிவுச் சீட்டைப் பிடுங்கிக் கொண்டு வருவ'தாகச் சுட்டிச் செல்கிறார். மேலும், “அவள் மனசு முழுக்கக் குதூகலம். விளையாட்டுத்தனம். பூவுக்குப் பூவாக மாறிமாறி உட்கார்ந்து விளையாடுகிற வண்ணத்துப் பூச்சித்தனம். பார்த்தவர்களுக்கெல்லாம் பற்றிக் கொள்கிற மழலைத்தனம்” என்ற ஆசிரியரின் கூற்றும் இதைப் புலப்படுத்துகிறது. மேலும் மயில்தாய்க்கு விளையாட்டே உயிர்மூச்சு. ஆனால் அவளது உயிர் பறிக்கப்படுவது போல, அவளது விளையாட்டு அவளிடமிருந்து புறந்தள்ளப்படுகிறது.

**இழந்த உலகம்**

'நாளைய உலகம் இன்றைய குழந்தைகளின் கையில்' என்பர். அத்தகைய குழந்தைகளை எண்ணி பாரதி பாடிய,